1969 செப்டம்பர் 11]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) மாணவர் விடுதிகள் 3; மாணவியர் விடுதி 1.

(இ) மாணவர் விடுதிகள் 11; மாணவியர் விடுதிகள் 8.

(உ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் மட்டுமல்லாமல், இம் மாநிலத்திலுள்ள மற்ற மாவட்டங்களிலும், தனியார் கட்டிடங்களில் இயங்கி வரும் அரசு மாணவ விடுதிகளுக்காகக் கட்டிடங்களைக் கட்டுவது பற்றி அரசு ஏற்கெனவே பரிசீலனை செய்து வருகிறது. வரவு செலவுத் திட்டத்தில் இது குறித்து ஒதுக்கப்படக்கூடிய நிதியைப் பொறுத்து, இத்திட்டம் படிப்படியாக மேற்கொள்ளப்படும்.

திரு. என். மருதாசலம் : கோவை மாவட்டத்தில் சிங்கா நல்லூரில் ஒரு ஹாஸ்டல் இருந்தது. அதை பீளமேட்டிற்கு வாடகைக் கட்டடத்தில் மாற்றியிருக்கிறார்கள். சிங்காநல்லூரில் படிக்கக்கூடிய குழந்தைகள்தான் அங்கிருக்கிறார்கள். அந்த ஹாஸ்டலை இப்போது வெகு தூரத்திலுள்ள ஒரு இடத்தில் வாடகைக் கட்டடம் ஒன்றில் மாற்றியிருக்கிறார்கள். சிங்கா நல்லூரில் அரசாங்கத்திற்குச் சொந்தமான இடம் இருக்கிறது. ஆகவே அங்கு இந்த ஹாஸ்டலைக் கட்டுவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : சிங்கா நல்லூர் பற்றிய விவரம் இப்போது என்னிடம் இல்லை. ஆனால் கோவை மாவட்டத்தில்தான் மூன்று விடுதிகளும் அரசாங் கத்திற்குச் சொந்தமான விடுதிகளாக இருக்கின்றன. மற்ற மாவட்டங்களில் அப்படிக் கிடையாது. இருந்தாலும் சிங்கா நல்லூரில் கூட அவசியம் ஏற்பட்டால் கட்டலாம். அதுபற்றிய செயற்குறிப்பு இப்போது என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கிறேன்.

கரும்பு வளர்ப்புத் திட்டம்

*203 வினா.—திரு. சி. கோவிந்தராஜன்: மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரும்பு வளர்ப்பு (Sugarcane Nursery) திட்டத்தின் கீழ் தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள சர்க்கரை ஆலைகளுக்கு ஆண்டு தோறும் அரசு மூலம் ஏதாவது மானியத் தொகை கொடுக்கப்படுகிறதா ?

(இ) அப்படியானால் 1964-ம் ஆண்டு முதல் இதுவரை எந்தெந்த சர்க்கரை ஆலைகளுக்கு எவ்வளவு தொகை வழங்கப் படுகிறது ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. சி. கோவிந்தராஜன் : தென்னூர்க்காடு மாவட்டத்திலுள்ள கரும்பு அபிவிருத்தி அதிகாரிகள் மூலமாக கரும்பு பயிரிடும் விவசாயிகளுக்கு இப்படிப்பட்ட உதவி கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தற்சமயம் இல்லை.

Price of Sugarcane

* 204 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(*a*) whether the South Indian Sugar Mills Association has decided to cut the price paid to sugarcane from Rs. 90 to Rs. 80 per tonne; and

(*b*) if so, the reasons therefor?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) சர்க்கரையின் மீது ஆயத்தீர்வை விதிக்கும் அடிப்படையை மாற்றுவது குறித்து இந்திய அரசு எடுத்த முடிவாலும், வறட்சி நிலைமைகளினால் கரும்பிலிருந்து கிடைக்கும் சர்க்கரையின் அளவு மிகவும் குறைவாக இருப்பதாலும், வெளிச் சந்தையில் சர்க்கரையின் விலை குறைந்துவிட்டதனாலும், கரும்பின் விலையை டன் ஒன்றுக்கு ரூ. 90-லிருந்து ரூ. 80 எனக் குறைக்க சங்கம் முடிவு செய்துள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவரவர்களே, விலைவாசியும், வாழ்க்கைச் செலவும், விவசாயக் கூலியும் உயர்ந்து வரும் இந்நாளிலே கரும்புக்கு டன் ஒன்றுக்கு 90 ரூபாய்க்கும் குறைவாகக் கொடுத்தால் அது விவசாயிகளைப் பெரிதும் பாதிக்கும். அதிலும், இந்த ஆண்டு அவர்கள் பெரிதும் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். தற்போது சில கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் டன் ஒன்றுக்கு 40 ரூபாயிலிருந்து 50 ரூபாய்வரை கூடக் கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். எனவே, உயர்ந்தபட்ச விலை என்று நிர்ணயிப்பதைப்போல, குறைந்தபட்ச விலையையும் நிர்ணயம் செய்ய முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இந்த விலையை மத்திய சர்க்கார் குறிக்கிறது. குறைந்தபட்ச விலை ரூ. 73.70. 'சிஸ்மா' தனிப்பட்டது, எனவே, அது கொடுக்கும் தொகைக்கும், அரசாங்கத்திற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை.

திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் : தலைவரவர்களே, இந்த 70 ரூபாய்கூட கிடைக்காமல், வெட்டுக்கூலி, டிரான்ஸ்போர்ட் சார்ஜ் முதலியன செய்தும் 50 ரூபாய்கூட கிடைக்காத நிலை இருக்கிறதே. எனவே, குறைந்தபட்ச விலையை ரூ. 80 என்று ஆக்கினால் வசதியாக இருக்காதா ? மேலும், ஆலைகளுக்கு கரும்பு